தினத் தந்தி
DAILY THANTHI
பவள விழா ஆண்டு

**15 – 12 - 2021**

# வருமான வரித்துறை முதன்மை தலைமை கமிஷனராக கீதா ரவிச்சந்திரன் பொறுப்பு ஏற்பு

## சென்னை கல்லூரியில் படித்தவர்



கீதா ரவிச்சந்திரன்

சென்னை, டிச.16-

வருமான வரித்துறையின் தமிழ் நாடு மற்றும் புதுச்சேரியின் முதன்மை தலைமை கமிஷனராக கீதா ரவிச்சந்திரன் நேற்று பொறுப்பு ஏற்றார்.

இவர் இந்திய வருவாய் பணியில் 1987-ம் ஆண்டு சேர்ந்தார். தேசிய நேர்முக வரிகள் பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்று, சென்னை, மும்பை, நாக்பூர், பெங்களூரு மற்றும் நாட்டின் பல்வேறு இடங்களில் கீதா ரவிச்சந்திரன் பணியாற்றி இருக்கிறார்.

இவருடைய 34 ஆண்டுகள் நீண்ட அலுவலக பணியில் பல முக்கிய பொறுப்புகளை வகித்திருக்கிறார். கீதா ரவிச்சந்திரன் சென்னையில் ஸ்டெல்லா மாரீஸ் கல்லூரியில் படித்தவர். கலை, இலக்கியம் மற்றும் இசைத்துறையில் கீதா ரவிச்சந்திரன் மிகுந்த நாட்டம் உள்ளவர்.

# தமிழ்நாடு, புதுச்சேரி வருமான வரித்துறை முதன்மை ஆணையரானார் கீதா ரவிச்சந்திரன்!

By **News Editor** December 15, 2021 17 No Comment



தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி வருமான வரித்துறை முதன்மை ஆணையராக கீதா ரவிச்சந்திரன் பொறுப்பேற்றுள்ளார்.

கீதா ரவிச்சந்திரன், 1987 பிரிவு ஐ.ஆர்.எஸ். அதிகாரி. இவர், நாக்பூரில் உள்ள நேரடி வரிகளுக்கான தேசிய அகாடமியில் பயிற்சி பெற்ற பிறகு, சென்னை, மும்பை, நாக்பூர் மற்றும் பெங்களூரு உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளில் பணியாற்றியவர். அவரது, 34 ஆண்டுகால பணியில் மதிப்பீடு, தேடல் மதிப்பீடு, தீர்ப்பாய பிரதிநிதித்துவம், டிடிஎஸ், விசாரணை, மத்திய கட்டணம், சர்வதேச வரிவிதிப்பு உள்ளிட்ட துறைகளில் முக்கிய பணியாற்றியிருக்கிறார்.

கீதா ரவிச்சந்திரன் தற்போது, தமிழ்நாடு, புதுச்சேரியின் வருமான வரி முதன்மை இவர் ஆணையராக பொறுப்பேற்றுள்ளார். சென்னையி ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரியில் பயின்ற கீதா ரவிச்சந்திரன், எழுதுவதிலும் வாசிப்பதிலும், இசையிலும் ஆர்வம் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.